2017 ஜனவரி 27]

உராய்வு ஏற்பட்டால் மின் பொறி தட்டி கீழே விழுகிறது. மின்கம்பி எப்பொழுது அறுந்து விழுமோ என்ற அச்சத்தில் மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், கண்காணிப்புப் பொறியாளரிடமும் பல முறை மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட அமைச்சருக்கும் தெரியும். அந்த மின்மாற்றியை, பக்கத்தில் உள்ள காலி இடத்திற்கு மாற்றி அமைத்து, அந்தப் பள்ளி மாணவர்களின் அச்சத்தை நிரந்தரமாகப் போக்கமுடியுமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதியிலுள்ள பள்ளியிலே இருக்கின்ற* transformer-*ஐ மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அது முக்கியமான கோரிக்கைதான். இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

மீன் இறங்குதளம்

***10961—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியத்திலுள்ள புதுக்குடி, பொன்னாகரம், வடக்கு அம்மாபட்டினம், கட்டுமாவடி ஆகிய பகுதிகளில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2017 ஜனவரி 27

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்."

இவ்வுலகத்தில் அழியாது நிற்பது உயர்ந்த புகழைத் தவிர வேறு ஒன்று இல்லை என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, உயர்ந்த புகழுடன் என்றென்றும் எங்களுடன் இருந்து வழிநடத்தும் உலகம் முழுமையும் வாழ்கின்ற 10 கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என் பதிலை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியம், புதுக்குடி, பொன்னாகரம், வடக்கு அம்மாபட்டினம், கட்டுமாவடி ஆகிய பகுதிகளில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலவர் இல்லாத கருவறையாய்; முழுமதி இல்லாத வானமாய்; எங்கள் இதய தெய்வம் இல்லாத மன்றத்தில், அவர் எண்ணமெல்லாம் நிறைந்திருக்கின்ற மீனவர் சமுதாய மக்களின் கோரிக்கையான எனது தொகுதியிலுள்ள மீனவர் கிராமங்களிலே மீன் இறங்குதளத்தை அமைத்துத் தருமாறு நான் அரசிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மணமேல்குடி ஒன்றியத்திலுள்ள புதுக்குடி, பொன்னாகரம், வடக்கு அம்மாபட்டினம், கட்டுமாவடி ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்களை அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே மீனவர்கள் கடலிலிருந்து மீன்களைக் கொண்டுவந்து கரை சேர்ப்பதற்கு மிகவும் இன்னலுக்குள்ளாகிறார்கள். ஆகவே மீன் இறங்குதளத்தை அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னாகரம், புதுக்குடி, வடக்கு அம்மாபட்டினம், கட்டுமாவடி மீன்பிடி கிராமங்களில் கடல் பகுதியைச் சார்ந்த இந்தப் பகுதிகளில் மீன்பிடிக் கலன்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கின்ற நிலையில், தற்போது மீன் இறங்குதளம் அமைக்கக்கூடிய அளவுக்கு அங்கு சாத்தியக்கூறுகள் இல்லை. உதாரணமாக, பொன்னாகரம் பகுதியில் 53 மீன்பிடிக் கலன்களும், புதுக்குடி பகுதியில் 265 மீன்பிடிக் கலன்களும், வடக்கு அம்மாப்பட்டினம் பகுதியில் 52 மீன்பிடிக் கலன்களும், கட்டுமாவடியில் 67 மீன்பிடிக் கலன்களும் இருக்கின்றன. எனவே, வருங்காலத்தில் மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கை அதிகமாகும்பட்சத்தில், இதுகுறித்து நாம் பரிசீலிக்கலாம்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எப்போதுமே ஒரு தீர்க்கதரிசனமான அரசு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒவ்வொரு கிராமங்களிலும், ஒவ்வொரு மாவட்டங்களிலும் விசைப்படகாக இருந்தாலும் சரி, கட்டுமரங்களாக இருந்தாலும் சரி, அதேபோன்று F.R.P. – Fibre Reinforced Plastic *வள்ளங்களாக இருந்தாலும் சரி, உட்புறம், வெளிப்புறம் பொருத்தப்பட்ட இயந்திரமாக இருந்தாலும் சரி, அவையெல்லாம் பாதுகாப்பாக கடலுக்குள் சென்று மீன் பிடித்து கரைக்குத் திரும்புவதற்கு ஏதுவாக, கரையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் என்பது மிக மிக முக்கியமான, இன்றியமையாத ஒன்று. வருடத்திற்கு ஒரு* Fish Landing Centre *அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ.10 கோடி, ரூ.20 கோடி என்று ஏற்படுத்தித் தருவது என்று இந்த வேகத்தில் போனால் அனைத்து இடங்களிலும் மீன் இறங்கு தளங்கள் அமைப்பதற்கு கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாகும். எனவேதான், நம் அம்மா அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு ஒரு* Comprehensive Plan–*ஐ உருவாக்கினார்கள். ஐக்கிய நாடுகள் சபை* Green Climate Fund *என்ற ஒரு நிதியை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது, தட்பவெட்ப பசுமை நிலை நிதியை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த நிதியிலிருந்து ஒரு* Comprehensive Plan-Bay of Bengal, *இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல் ஆகிய இந்த மூன்று பக்கங்களிலுமுள்ள நம்முடைய மீனவக் கிராமங்களுக்கு தேவையான அடிப்படை*

[2017 ஜனவரி 27

கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், துறைமுகங்கள் மேம்படுத்துதல், தங்கு தளங்கள் அமைத்தல் மற்றும் எல்லாவிதமான வசதிகள் செய்வதற்கு கருத்துரு ஆராயப்பட்டு வருகின்றது. அதற்கான survey எடுத்துவரப்படுகிறது. குறுகிய காலத்திலே, அதாவது இரண்டாண்டுகள் அல்லது மூன்றாண்டுகளிலே எல்லா கிராமங்களிலும், எல்லா மேம்படுத்தப்பட்ட வசதிகளையும் நம்முடைய மீனவர்களுக்கு உரிய வகையிலே செய்து தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.*

திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட கிராமங்கள் அனைத்தும் அருகருகே அமைந்துள்ள கிராமங்கள். ஒரே ஒன்றியத்தைச் சேர்ந்தவை. ஆகவே, எல்லா கிராமங்களையும் ஒன்றிணைத்து, ஒரு இடத்திலாவது வருங்காலத்தில் மீன் இறங்குதளத்தை அமைத்துத் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு, பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில், இருக்கின்ற கடற்கரைப் பகுதிகளில், 10 இடங்களில் கடல் அரிப்பு தடுப்புப் பணிக்காக தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் 12–12–2016 அன்று ஏற்பட்ட 'வர்தா' புயலால் 250 மீட்டர், 300 மீட்டர் நீளமுள்ள அந்தத் தூண்டில் வளைவுகளில் எல்லாம் 50 மீட்டரிலிருந்து 100 மீட்டர் வரை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதைக் கேளுங்கள். மூலக் கேள்வி மீன் இறங்குதளம் அமைப்பது குறித்தது. அதையொட்டிய ஒரு துணைக் கேள்வி என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்கும். நீங்கள் சுருக்கமாகக் கேளுங்கள்.*

2017 ஜனவரி 27]

திரு. கே.பி.பி. சாமி: *'வர்தா' புயலின் காரணத்தால், அந்தக் கற்களெல்லாம் சரிந்திருக்கின்றன. அதை உடனடியாக சரி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதனை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மீண்டும் ஒன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 'வர்தா' புயலினால், கட்டுமரங்கள், நாட்டுப் படகுகள், பைபர் படகுகள், விசைப்படகுகள் போன்றவை திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பெரிய அளவில் பாதிப்படைந்திருக்கின்றன. அரசின் சார்பாக வழங்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை மிக, மிகக் குறைவாக இருக்கின்றது. பாதிக்கப்பட்ட அனைவருக்குமே அந்தத் தொகை வழங்கப்படவில்லை. அதையும் அதிகப்படுத்தி, விரைவாக வழங்கப்படுமா? கிடைக்காதவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 3 கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். ஒன்று, கடலில் குறுக்கே போடப்பட்டிருக்கின்ற* Groynes *கற்கள் 'வர்தா' புயலின் தாக்கத்தினால், சில இடங்களிலே அடித்துச் செல்லப்பட்டதென்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அது எந்தெந்த இடங்களில் அடித்துச் செல்லப்பட்டது என்பது குறித்து மீன் வளத் துறையிலுள்ள* Harbour circle *மூலமாக, மீன் வளத் துறை கண்காணிப்புப் பொறியாளரால்* survey *செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த சர்வேயின் அடிப்படையில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுவாக வினாக்கள்—விடைகள் நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்ற பண்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். கேள்வி நேரத்தில் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் அவர் கேள்வி கேட்கக்கூடாது. இருப்பினும் உறுப்பினரின் கேள்விக்கு பதில் அளிக்கிறேன்.*

[2017 ஜனவரி 27

முற்பகல் 10–40

‘வர்தா’ புயல் காரணமாக, மூன்று மாவட்டங்களிலே, கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய் அளவிற்கு, நம்முடைய தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) தாராளமாக நிதியை வாரி வழங்கியிருக்கிறது. வர்தா புயலால் பாதிக்கப்பட்ட எல்லா இடங்களுக்கும் நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் அனைவருடன் சென்று நிவாரணம் கொடுத்தோம். எந்த ஒரு பிரச்சினையும் எங்கேயும் இல்லை. ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலை தயவுசெய்து இந்த அவையிலே பதிவு செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் அறுதியிட்டு, உறுதியாகச் சொல்கிறேன். இந்த அவைக்கு தவறான தகவலைத் தெரிவித்ததற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருத்தம் தெரிவிக்கவேண்டும். (குறுக்கீடுகள்) அப்படி நிவாரணம் கொடுக்காமல் விடுபட்டிருந்தால் அதுகுறித்து நீங்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. (குறுக்கீடுகள்) மூலக் கேள்விக்கு தொடர்பில்லாத கேள்விக்கு நான் பதில் கூறியுள்ளேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அமைதியாக இருங்கள். திரு. சாமி, கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) வர்தா புயலால் பாதிக்கப்பட்டவர்கள் விடுபட்டிருந்தால் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரச் சொன்னார். (குறுக்கீடுகள்) அதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) ஒன்றுமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

2017 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) இல்லை ஒரே ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. செங்குட்டுவன், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி கேட்கவில்லை, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: இல்லை, ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை மதிக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான், அவர் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் கேள்வி கேட்டாலும் நான் பதில் சொன்னேன். நான் ஒரே வரியில் பதில் சொல்லிவிட்டுச் செல்லலாம். மேலும் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் கேள்வி கேட்பதால், தனிக் கேள்வி போடவும் என்றும் நான் சொல்லியிருக்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதனால் தயவுசெய்து அவைக்கு தவறான தகவலைக் கொடுக்கவேண்டாம். (குறுக்கீடுகள்) வர்தா புயலால் பாதிக்கப்பட்டவர்கள் எங்கேயாவது விடுபட்டிருந்தால், நான் உறுதியாகச் சொல்கின்றேன். நீங்கள் எந்த இடத்தில் விடுபட்டிருக்கிறது என்று எழுதிக்கொடுங்கள். அங்கு படகுகள் சேதமடைந்திருக்கிறதா? வலைகளுக்கு சேதம் ஏற்பட்டதா? Outboard machine பாதிப்பு இருக்கின்றதா? Inboard machine பாதிப்பு இருக்கின்றதா? விசைப் படகுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றதா? கட்டுமரத்திற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றதா? படகுகளில் ஒரு பகுதி உடைந்திருக்கிறதா? முழுவதும் படகுகள் உடைந்து மூழ்கியிருக்கின்றதா என்பதையெல்லாம் கண்டறிந்து, நிவாரணம் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. கே.பி.பி. சாமி, துணைக் கேள்வி ஒன்றுதான் வழங்கப்படும். (குறுக்கீடுகள்) உங்களுக்கு ஒரு கேள்வி கேட்கத்தான் அனுமதி. (குறுக்கீடு) உங்களை ஒரு கேள்வி கேட்க அனுமதித்ததே பெரிது. நான் கேள்வி கேட்க அனுமதி அளித்தும், நீங்கள் சரியாக கேள்வி கேட்கவில்லை. மீன் இறங்குதளம் குறித்த மூலக் கேள்விக்கு நான் அனுமதி அளித்தேன். ஆனால் நீங்கள் குற்றச்சாட்டு இல்லாமல் கேள்வி கேட்டிருக்கவேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[2017 ஜனவரி 27

வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

5—

பொறியியல் கல்லூரி

***6789—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, திருவாடனையில் பொறியியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தொகுதி, திருவாடனையில் பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவாடனை தொகுதி, திருவாடனையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மூலமாக கலைக் கல்லூரி துவங்கப்பட்டு, மாணவ மாணவியர்கள் செவ்வனே பயின்று வருகிறார்கள்.*

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடனை தொகுதியானது ஒரு பெரிய தொகுதி மட்டுமல்ல, பொருளாதாரத்தில் மிகவும் பிற்பட்ட மக்களை உள்ளடக்கியதாக உள்ளது. இப்பகுதியிலுள்ள ஏழையெளிய மாணவ, மாணவிகள் 48 கிலோ மீட்டர் தூரம்